ஆண்டு பட்டிகை வழக்கு எண்.168/2025

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 168/2025 LW– 1 PW– 1

| | |
|---|---|
| Name | : கார்த்திக் ( புகார்தாரர்) |
| Father's Name | : சிவசாமி |
| Village | : விளாம்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 21/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 6th day of April 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து சம்பவத்திற்கு முன்பாக சென்ட்ரிங் வேலை செய்து வந்தேன். தற்போது என்னால் விபத்தின் காரணமாக வேலை செய்ய இயலவில்லை. ஆஜர் எதிரியை சரியாக ஞாபகம் இல்லை. கடந்த 28.03.2025ம் தேதி மதியம் 2.00 மணியளவில் நான் செந்துறையில் இருந்து நத்தம் நோக்கி Splender Plus இருசக்கர வாகனத்தில், இருசக்கர வாகனங்களின் உதிரி பாகங்களை வாங்கிக் கொண்டு வந்து கொண்டிருந்தபோது, நத்தத்திலிருந்து செந்துறை நோக்கி எனக்கு எதிர் திசையில் லாரி ஒன்று அதிகவேகமாக வந்து திடீரென கிழக்கு பக்கமாக ஏறி எனது வாகனத்தில் மோதி விபத்து ஏற்படுத்திவிட்டார். மேற்படி லாரியை ஓட்டி வந்தவர் பெயர் முருகேசன். நான் காயம்பட்டிருந்தபோது லாரி ஓட்டுநர் இறங்கி வந்து என்னைப் பார்த்தபோது நான் அவரை பார்த்தேன். மேற்படி லாரியின் பதிவு எண் TN 57 AP 3789 ஆகும். மேற்படி விபத்தில் எனக்கு வலது

கால் முழங்காலில் எலும்பு முறிவு, இடது கை முழங்கையில் காயமும் ஏற்பட்டிருந்தது.

2. சம்பவ இடத்தில் சிறு நேரம் கழித்து நான் மயக்கமாகிவிட்டேன். பின்னர் நான் மயக்கம் தெளிந்தபோது மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். மேற்படி மருத்துவமனையில் நான் சுமார் 5 மாதங்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டேன். எனது வலது காலில் இடுப்பில் இருந்து பிளேட் வைக்கப்பட்டுள்ளது. **(சாட்சி தனது வலது காலில் உள்ள காயத்தழும்பை காண்பித்தார்.)** அதனால் என்னால் சரியாக நடக்க முடியாது. எனவே இன்றுவரை நான் வேலைக்கு செல்ல முடியாமல் வீட்டில் இருந்து வருகிறேன். என் அம்மா கூலி வேலைக்கு சென்று அந்த வருமானத்தை வைத்து என்னை கவனித்து வருகிறார். நான் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்து நான் சொல்லச் சொல்ல எழுதி படித்துக் காண்பித்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் மற்றும் கையொப்பம் என்னுடையது. (**அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**</u>

3. நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களைத்தான் புகார் வாக்குமூலம் மற்றும் போலீசார் விசாரிக்கும்போதும் சொன்னேன் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தை யார் எழுதினார் என்று தெரியாது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தை சம்பவம் நடந்த அன்றே கொடுத்து விட்டேன் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் அடித்தல் திருத்தல் இல்லாமல் எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்றே 28.03.2025ம் தேதி புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றாலும் அதற்கு பிறகு எந்த ஒரு புகார் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் சரிதான். மேற்படி தேதிக்கு பிறகு புகார் வாக்குமூலம் கொடுக்கப்பட்டிருந்தால் அது நான் கொடுத்தது இல்லை என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் கடந்த, கோடாங்கி பட்டி,

எண், மதுரை போன்ற வார்த்தைகள் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான் . புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு படித்துக் காண்பித்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லி திருத்தம் செய்யப்படவில்லை என்றால் சரிதான் .

4. நத்தம் அரசு மருத்துவமனையில் சேர்த்து அதன் பிறகு மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாக எனக்கு மற்றவர்கள் சொல்லி தெரியும் நத்தம் அரசு மருத்துவமனையில் மருத்துவர் என்னை விசாரித்தாரா என்றால் இல்லை. மருத்துவர் விசாரிக்கும் போது அடைக்கனுர் என்ற இடத்தில் விபத்து நடந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது . 28.3.2025 ஆம் தேதி வாக்குமூலம் கொடுத்த பிறகு நத்தம் போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை . வாகனம் ஓட்ட எனக்கு வாகன ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான் . சம்பவத்தன்று மது அருந்திவிட்டு தான் இருசக்கர வாகனத்தை ஓட்டினேன் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் மற்றும் போலீசார் விசாரணையில் இருசக்கர வாகனத்தை யாரிடமிருந்து கேட்டு பெற்று எப்போது எந்த இடத்தில் இருந்து கிளம்பி எந்த இடத்திற்கு செல்லும் போது எத்தனை மணிக்கு விபத்து ஏற்பட்டது என்ற விவரங்களை சொல்லவில்லை என்றால் சரிதான்.

5. புகார் வாக்குமூலத்தில் 28/3/2025 ஆம் தேதி மதியம் சுமார் 2 மணி அளவில் நண்பர் அரவிந்த் என்பவரின் இருசக்கர வாகனத்தை வாங்கிக்கொண்டு செந்துறை சென்று விட்டு வீட்டிற்கு வருவதற்காக சுமார் 3 மணி அளவில் கோடாங்கி பட்டி என்ற ஊரின் அருகே சம்பவம் நடந்ததாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சாலையில் பக்கத்திலும் மரங்கள் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் சாலையானது வளைவாக உள்ளது என்றால் சரிதான் . வளைவான சாலை என்பதால் எதிர் திசையில் எந்த வண்டி வருகிறது என்று பார்க்க இயலாது என்றால் சரிதான். சாலை வளைவாக இருப்பதால் அந்த இடத்தில் எந்த ஒரு வாகனமும்

அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் வர இயலாது என்றால் சரிதான் .

6. நான் 28.3.2025–ம் தேதி கொடுத்த புகார் வாக்குமூலத்தை வைத்து தான் வழக்கை விசாரிக்க முடியும் என்றாலும், அதற்கு பின்னிட்டு உள்ள வாக்குமூலத்தை வைத்து வழக்கு விசாரிக்க முடியாது என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தின் பதிவு எண் மற்றும் எதிரியின் பெயர் ஆகியவை போலீசார் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நானாக மது அருந்திவிட்டு சுயநினைவின்றி விபத்தை ஏற்படுத்தி கொண்டேன் என்றாலும், எதிரியால் விபத்து ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல.

7. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்பதால் தான் புகார் வாக்குமூலத்தில் ஒருவிதத்திலும் போலீசார் விசாரணையில் மற்றும் முதல் விசாரணையில் ஒரு விதத்திலும் தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி விபத்து சமயத்தில் வாகனம் ஓட்டவில்லை என்றாலும், விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனம் சம்பவ இடத்தின் வழியாக செல்லவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நஷ்ட ஈடு பெறுவதற்காக எதிரி மீது பொய்யாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல..

**மறு விசாரணை :** இல்லை.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.04.06 15:17:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்